**ஜனவரி – 03**

# TNPSC துளிகள்

- இந்திய எண்ணெய்க் கழகம் ஆனது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் விசையாழிகளுக்காக வேண்டி (turbines) நாட்டின் முதல் தொலைநிலைக் கண்காணிப்பு முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - ஹைதராபாத்தில் அமைந்துள்ள இந்தத் திட்டத்தை BHEL மற்றும் ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான BGGTS (BHEL-GE Gas Turbine Services) செயல்படுத்துகிறது.
- நாட்டின் முதல் எத்தனால் ஆலையை பொது-தனியார் கூட்டின் கீழ் தனது மாநிலத்தில் அமைக்கும் ஒரு ஒப்பந்தத்தில் சத்தீஸ்கர் அரசானது கையெழுத்து இட்டு உள்ளது.
- மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் உயிரினங்களுக்கான இந்தியாவின் முதல் பூங்கா (Pollinator park) ஆனது உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடால் மாவட்டத்தில் உள்ள ஹால்டுவானி என்ற இடத்தில் நிறுவப் பட்டுள்ளது.
  - மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் உயிரினங்களில் தேனீக்கள், பறவைகள், பட்டாம்பூச்சிகள், அந்துப் பூச்சிகள், வண்டுகள், குளவிகள், வௌவால்கள் மற்றும் சிறிய பாலூட்டிகள் ஆகியவை அடங்கும்.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று ஐரோப்பிய ஒன்றியம்-இங்கிலாந்து வர்த்தகம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தமான பிரெக்ஸிட் வர்த்தக ஒப்பந்தத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்கள் கையெழுத்திட்டனர்.
- விண்வெளியை அமைதியாகப் பயன்படுத்த இரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் விதமாக இந்தியாவிற்கும் பூடானிற்கும் இடையிலான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - வெளிப்புற விண்வெளி ஒப்பந்தத்தை ஐக்கிய நாடுகள் சபை 1963 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது.
- ஆஸ்திரேலிய அரசானது அதன் பழங்குடி மக்களைக் கௌரவிப்பதற்காக வேண்டி அதன் தேசிய கீதத்தைத் திருத்துகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## மதராஸ் உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி

- நீதிபதி சஞ்சிப் பானர்ஜியை மதராஸ் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.
- இவர் மதராஸ் உயர் நீதிமன்றத்தின் 50வது தலைமை நீதிபதியாக இருப்பார்.
- தற்போது இவர் கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வருகிறார்.
- தற்போதைய தலைமை நீதிபதி ஏ.பி. சாஹி அவர்கள் டிசம்பர் 31 அன்று பதவி ஓய்வு பெற்றார்.

## தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய தலைவர்

- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி S.பாஸ்கரன், தமிழ்நாடு மாநில

மனித உரிமைகள் ஆணையத்தின் புதிய தலைவராக பொறுப்பேற்றார்.

- ❖ அவர் தமிழக ஆளுநரால் நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ முதலமைச்சர், மாநில சட்டமன்றத்தின் சபாநாயகர், உள்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவால் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாகவும், தலைவராகவும் நியமனம் செய்யப் படுவோர் பரிந்துரைக்கப் படுவார்கள்.
- ❖ ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி மீனா குமாரியின் பதவிக் காலத்திற்குப் பின்னர் கடந்த 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்தப் பதவி காலியாக இருந்தது.
- ❖ 2020 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தில், இந்த ஆணையத்தின் தற்காலிகத் தலைவராக நீதிபதி ஜெயச்சந்திரன் என்பவர் நியமிக்கப் பட்டிருந்தார்.

# தேசியச் செய்திகள்

## டிஜிட்டல் இந்தியா விருதுகளின் 6வது பதிப்பு 2020

| | | |
|---|---|---|
| 3 | Excellence in Digital Governance - STATE / UT | Haryana |
| | | Tamil Nadu |
| | | Uttar Pradesh |
| | | West Bengal |

- ❖ இந்நிகழ்ச்சித் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஒரு நிறுவனமான தேசிய தகவல் மையத்தால் நடத்தப் பட்டது.
- ❖ டிஜிட்டல் இந்தியா விருதுகளானது இந்தியாவின் தேசியத் தரவு தளம் என்ற அமைப்பின் கீழ் நிறுவப் பட்டது.
- ❖ இதன் நோக்கம் "அரசாங்க சேவை விநியோகத்தை டிஜிட்டல் முறையில் மாற்றப் படுவதை" ஊக்குவிப்பதாகும்.
- ❖ இந்த விருதுகளை வெல்ல மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் ‘வெளிநாட்டில் உள்ள இந்தியத் தூதரகங்கள்’ மட்டுமே தகுதியானவை ஆகும்.
- ❖ இந்த ஆண்டின் பதிப்பில் இரண்டு புதிய பிரிவுகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவை,
    - ○ கொள்ளை நோய்க் காலத்தில் புத்தாக்கம் மற்றும்
    - ○ முன்மாதிரியான தயாரிப்புகள் பிரிவில் விருதுகள் என்பவையாகும்.
- ❖ 2020 ஆம் ஆண்டின் டிஜிட்டல் இந்தியா விருதில் ஹரியானா தனது மின்-ஆளுமை

முயற்சிகளுக்காக முதல் இடத்தைப் பெற்றுள்ளது.

- மின்-ஆளுமை முயற்சிகளில் தமிழகம் இரண்டாவது இடத்திலும், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- மாநிலம்/ஒன்றியப் பிரதேசத்தில் டிஜிட்டல் நிர்வாகத்தில் சிறந்து விளங்குதல் என்ற பிரிவில் தமிழகம் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
- தபால் துறையானது தங்கப் பதக்கத்தையும், நீதித்துறையின் கீழ் உள்ள இந்தியாவின் உச்சநீதிமன்றத்தின் மின்னணு-குழுவானது அமைச்சகம்/துறையினுள் சிறந்த டிஜிட்டல் ஆளுமைப் பிரிவில் பிளாட்டினம் பதக்கத்தையும் வென்றுள்ளது.
- சிறந்த டிஜிட்டல் ஆளுமைப் பிரிவில் ஹரியானாவானது பிளாட்டினப் பதக்கத்தையும் உத்தரப் பிரதேசம் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளது.
- கொள்ளை நோய்க் காலத்தில் புத்தாக்கம் என்ற பிரிவில் பீகார் மாநிலம் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது.

## நாகாலாந்து - அமைதி குலைந்த பகுதி


- மத்திய உள்துறை அமைச்சகமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று நாகாலாந்தை 1958 ஆம் ஆண்டு ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் கீழ், மேலும் ஆறு மாதங்களுக்கு 'அமைதி குலைந்த பகுதி' என்று அறிவித்துள்ளது.
- நாகாலாந்து கிட்டத்தட்ட ஆறு தசாப்தங்களாக ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் கீழ் உள்ளது.
- ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டமானது 1958 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் நடைமுறையில் உள்ளது.
- உள்துறை அமைச்சகமானது முன்னதாக ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தை மேகாலயா மாநிலம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சில இடங்கள் ஆகிய இடங்களில் இருந்து முழுமையாக திரும்பப் பெற்றது.
- தற்போது, நாகாலாந்து, மணிப்பூர் (இம்பால் மாநகராட்சி தவிர), அசாம், அருணாச்சலப் பிரதேசத்தின் சில மாவட்டங்கள் ஆகிய இடங்களில் மட்டுமே ஆயுதப் படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டமானது நடைமுறையில் உள்ளது.
- மாநில ஆளுநரோ அல்லது மத்திய அரசோ ஒரு மாநிலம் அல்லது ஒன்றியப் பிரதேசம் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஒரு அமைதி குலைந்த பகுதியாக அறிவிக்க முடியும்.




# சர்வதேசச் செய்திகள்


## நிரந்தரமற்ற UNSC உறுப்பினர்

- ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் (UNSC - UN Security Council) நிரந்தரமற்ற உறுப்பினராக இந்தியா தனது இரண்டு ஆண்டு பதவிக் காலத்தை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 1, அன்று தொடங்கியது.
- ஐக்கிய நாடுகள் சபையின் சக்தி வாய்ந்த ஓர் இடத்தை இந்தியா பெறுவது இது எட்டாவது முறையாகும்.
- அதன் மற்ற நான்கு நாடுகள் அயர்லாந்து, கென்யா, மெக்சிகோ மற்றும் நார்வே ஆகியனவாகும்.
- இந்தியா 2021 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலும் மீண்டும் 2022 ஆம் ஆண்டின் ஒரு மாதத்திலும் UNSC அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்.
- இந்தச் சபையின் தலைமைப் பதவியானது ஒவ்வோர் உறுப்பினர்களிடமும் ஒரு மாதத்திற்கு அகர வரிசைப்படி சுழற்சி முறையில் வழங்கப் படுகிறது.



## GAVI வாரியம்

- தடுப்பூசிகள் மற்றும் நோய்த் தடுப்புக்கான உலகளாவிய கூட்டணியால் (GAVI - Global Alliance for Vaccines and Immunisation) மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் GAVI வாரியத்தில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு வேண்டி பரிந்துரைக்கப் பட்டு உள்ளார்.
- அவர் GAVI வாரியத்தில் தென்கிழக்குப் பகுதி பிராந்திய அலுவலகம் (SEARO - South East Area Regional Office) / மேற்கு பசிபிக் பிராந்திய அலுவலகம் (WPRO - Western Pacific Regional Office) ஆகிய பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவுள்ளார்.
- இவர் மியனாமரின் மின்ட்ஹிட்வி என்பவருக்குப் பின்னர் இப்பதவியில் அமர்வார்.
- இவர் இந்தப் பதவியை 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை வகிப்பார்.
- டாக்டர் ஹர்ஷ் வர்தன் உலக சுகாதார அமைப்பின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- GAVI என்பது 2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- இது பொது மற்றும் தனியார் துறைகளை ஒன்றிணைக்கும் ஒரு உலகளாவிய தடுப்பூசிக் கூட்டணி ஆகும்.
- "அனைவருக்குமான நோய்த் தடுப்பு" என்ற நோக்கத்தை அடைய இது செயல்படுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் முதல் சமூகத் தாக்கப் பத்திரங்கள்

- புனேவில் உள்ள பிம்ப்ரி சின்ச்வாட் மாநகராட்சி மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டமானது இந்தியாவின் முதல் சமூகத் தாக்கப் பத்திரத்தை உருவாக்குவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பத்திரத்துடன் தொடர்புடைய ஒரு பொது நலத் திட்டத்தின் செலவை மாநகராட்சி நிர்வாகமானது ஏற்கும்.
- ஒரு சமூகத் தாக்கப் பத்திரமானது அடிப்படையில் சிறந்த சமூக விளைவுகளுக்குப் பணம் செலுத்துகிற வகையில் அமைந்த பொதுத் துறை அதிகாரத்துடன் போடப் பட்டுள்ள ஒரு ஒப்பந்தமாகும்.


Private money
Public money
PRIVATE INVESTORS
SERVICE PROVIDERS
GOVERNMENT
SOCIAL-IMPACT BOND-ISSUING ORGANIZATION
1. Working capital
2. Funding for operating costs
3. Performance-based payments
4. Repayment and ROI

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★